தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ.15 – மலர் 22 – இதழ் 3 – ஜூன்–ஜூலை 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

10 லட்சம் குடும்பங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி தொகுப்பு பெட்டகம் வழங்கும் திட்டம்...

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்புள்ள சகோதரிகளே,

முற்றம் வாயிலாக மாதந்தோறும் உங்களுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை தருவதாக உள்ளது.

மக்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் அனைத்து வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் எடுத்து வருகிறார். அவருக்கு உறுதுணையாக அனைத்துத் துறை அமைச்சர் பெருமக்களும், அலுவலர்களும் செயலாற்றி வருகின்றனர் என்பது அனைவருக்கும் தெரியும்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களின் ஆலோசனையின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் வழிகாட்டுதலில் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு எதிராக சிறப்பாக செயல்பட்டு அனைவரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளது. இந்த பாராட்டுகள் அனைத்தும் சுய உதவிக் குழு மகளிரான உங்களுக்கே உரியவை ஆகும்.

கொரோனா வைரஸை தடுக்கும் வகையில் முகக் கவசங்கள், கிருமி நாசினிகள், கைகழுவும் திரவங்கள், பாதுகாப்பு உடைகள் போன்ற பொருட்களை தயாரிக்கும் முறைகளை குறைந்த காலத்தில் அறிந்து, தரமான பொருட்களைத் தயாரித்து, அனைவருக்கும் தட்டுப்பாடின்றி அப்பொருட்கள் கிடைத்திட உதவி வரும் சுய உதவிக் குழு மகளிரின் திறனைக் கண்டு அனைவரும் வியக்கின்றனர். உங்களின் திறனைக் கண்டு நானும் பெருமை கொள்கிறேன்.

தங்கள் குடும்பத்தின் நலனை மட்டும் கருத்தில் கொள்ளாமல், பிறரின் நலனிலும் அக்கறை கொண்டு, கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபடுவதுடன், மக்களின் சிரமங்களைப் போக்கும் வகையில் பல்வேறு செயல்களில் ஈடுபட்டு வரும் சுய உதவிக் குழு மகளிர் அனைவரும் போற்றுதலுக்குரியவர்களே.

கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு எதிராக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் அரசின் திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்லும் சீரிய பணியினை மேற்கொள்ள வேண்டும். இப்பணியினை உங்களால் சிறப்பாக செய்ய முடியும். ஏனென்றால் சுய உதவிக் குழு மகளிர் சாதனைகள் படைப்பவர்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

“காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது” என்ற குறளுக்கேற்ப சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் உரிய நேரத்தில் செய்து வரும் சிறு உதவிகள் கூட மிகப் பெரிய நன்மைகளை ஏற்படுத்தி வருகிறது. பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு உதாரணமாக கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு எதிராக நீங்கள் மேற்கொண்டு வரும் அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பாக உள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் எனது பாராட்டுகள். உங்களின் இந்தப் பணி மேலும் சிறக்க வேண்டும். நாம் கடந்து செல்லும் பாதையில் எவ்வளவோ தடைகள் வரலாம். அதைத் தகர்த்தெறிந்திடும் வல்லமை உங்களுக்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். வெற்றியைப் பெற நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் உங்களுக்கு துணை நிற்கும் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர் (பொ)

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

குறளும்-பொருளும்

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும்.

நிலைபெற்று வரும் உயிர்களுக்கு மன நலம் சிறந்த செல்வம் தரும். இன நலமோ எல்லாப் புகழையும் தரும்.

உள்ளே...

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகத் தொழில் மேம்பாட்டிற்காக கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்பு வழங்கும் திட்டம் 06

கொரோனா வைரஸ் பாதிப்பிற்கு பிந்தைய மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்திற்கான சிறப்புக் கடன் உதவி திட்டம் 07

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் ஆய்வு 09

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு 12

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட்-19 சிறப்பு கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் 18

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 20

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY) 26

கொரோனா தடுப்புப் பணியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் பணிகள் 29

→ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் செப்டம்பர் 2020 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	செப்டம்பர் 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	செப்டம்பர் 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு
மகளிர்
மேம்பாட்டு
முற்றம்

மலர் 22
இதழ் 3
ஜூன்-ஜூலை 2020
விலை ரூ.15

• கௌரவ ஆசிரியர்கள்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும்
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
தலைமை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

• பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

• ஆசிரியர் குழு

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கே. சுமதி, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

• நிர்வாக ஆசிரியர்

சி. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

• நிதி நிர்வாகம்

அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

• பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

• துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்
• முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா
• பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்
• கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

பேரிடர்கள் கூட வாய்ப்பு அளிக்கும்..!

அன்புள்ள வாசகர்களுக்கு,

உலகிலேயே மிகப்பெரிய மக்கள் தொகையை கொண்ட இந்திய நாடு 'கொரோனா' பெருந்தொற்றை தடுப்பதற்கு ஐந்து முறை ஊரடங்கை செயல்படுத்தியது மிகப் பெரிய சவாலாகும். அரசின் ஒழுங்கு முறை வழிகாட்டுதல்களும், அனைத்துத் துறையினரின் கடுமையான உழைப்பும் இந்த ஊரடங்கை ஏறக்குறைய வெற்றிகரமாக்கியது. பொது மக்களின் ஒத்துழைப்பு முழுமையாக இருந்ததால், இந்த ஊரடங்கு நூறு சதவிகிதம் பலன் கொடுத்துள்ளது. 'கொரோனா' என்ற இந்த நச்சுக் கிருமியினை தடுப்பதற்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தப் போராட்டமானது ஒரு சில நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, காற்று மற்றும் பிளாஸ்டிக் மாசு கணிசமாக குறைந்துள்ளது என்றும், ஓசோன் படலத்தில் ஏற்பட்டிருந்த ஓட்டை அடைபட்டு வருவதாகவும் செய்திகள் வருகிறது. உயிர் சூழல்கள் பாதுகாக்கப்பட்டன. பறவைகள், மிருகங்கள் மற்றும் செல்லப் பிராணிகள் அனைத்தும் சுதந்திரமாக அளவில்லா மகிழ்ச்சியில் சுற்றித் திரிந்தன. மரங்கள் வெட்டப்படவில்லை, காடுகள் அழிக்கப்படவில்லை.

இந்த முழு அடைப்பு காலங்களில் பெரும்பாலும் அனைத்து குடும்பங்களிலும் ஆடம்பரத்திற்கான விரயங்கள் குறைந்து, தேவைக்கு மட்டுமே செலவுகள் செய்யும் நிலை உருவானதால் பல குடும்பங்களில் சேமிப்பு உயர்ந்துள்ளது. திருமணம் மற்றும் இறுதிச் சடங்குகளுக்கும், சமூக விழாக்களுக்கும், உறவினர் சந்திப்புகளுக்கும் பெரும் அளவில் செய்யப்படும் செலவுகள் குறைக்கப்பட்டு அதற்காக கடன்படாத நிலையும் உருவாகியுள்ளது.

மக்கள் வீடுகளுக்குள்ளே அடைந்து இருந்ததால் குடும்ப உறுப்பினர்களோடு உரையாடியது, கருத்துக்களை பகிர்ந்து கொண்டது, கிடைத்த பொருட்களை கொண்டு எளிமையாக பாரம்பரிய உணவுகளை சமைத்து உண்டது, பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடியது, தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தியது, சிறுசிறு வேலைகளை அனைவரும் பகிர்ந்து செய்தது ஆகியவை குடும்ப ஒற்றுமையை பலப்படுத்திய நிலையை உருவாக்கியுள்ளது. எனவே, இடர்பாடுகளைக் கூட முன்னேற்றத்திற்கான வாய்ப்பாக எடுத்துக் கொள்ள கற்றுக் கொள்வோம்.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், கோயம்புத்தூர் மாவட்ட மகளிர் சுயஉதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 25.06.2020 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறப்பு ஏற்பாடாக 10 லட்சம் குடும்பங்களுக்கு கபசுரக் குடிநீர், வைட்டமின் மாத்திரைகள், ஜிங்க் மாத்திரைகள், ஆர்சானிக் ஆல்பம் ஆகியவை அடங்கிய நோய் எதிர்ப்பு சக்தி தொகுப்புப் பெட்டகத்தை பயனாளிகளுக்கு வழங்கி துவக்கி வைத்தார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகத் தொழில் மேம்பாட்டிற்காக ரூ.300 கோடி மதிப்பீட்டில் கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்பு வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுக்கவும் உலக வங்கியின் கடனுதவியுடன் 918 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களில் 120 வட்டாரங்களைச் சேர்ந்த 3,994 கிராம ஊராட்சிகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு, இத்திட்டத்திற்காக 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உலக வங்கியுடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டது. இத்திட்டம் பல்வேறு சிறு, குறு தொழில்களை மேம்படுத்துவதன் மூலம் ஊரக பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

28.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் இருந்து, இந்தியாவிலேயே முதன்முறையாக கொரோனா வைரஸ் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், புதிதாகத் தொழில்களைத் தொடங்கவும், ஊரக மக்களின் வருமானத்தை உயர்த்தவும் 300 கோடி ரூபாய் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு வழங்கும் புதுமையான முன்னோடித் திட்டத்தினை துவக்கி வைத்து, ஐந்து பயனாளிகளுக்கு சிறப்பு நிதியுதவி வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, அரசு தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட தலைமைச் செயல் அலுவலர் திருமதி. எஸ். பி. கார்த்திகா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 29.05.2020அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், நிவாரணப் பணிகளை தீவிரமாக மேற்கொள்வது குறித்தும், பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வது குறித்தும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வு செய்தார்கள். இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஜே. கே. திரிபாதி, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 12.06.2020 அன்று, சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் கொரோனா வைரஸ் தொற்று ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களைத் தொடங்கவும் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, ஓமலூர், தாரமங்கலம், மேச்சேரி, பனமரத்துப்பட்டி, வீரபாண்டி, சங்ககிரி மற்றும் ஆத்தூர் ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் சிறப்பு நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள். உடன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

கொரோனா வைரஸ் பாதிப்பிற்கு பிந்தைய மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்திற்கான சிறப்புக் கடன் உதவி திட்டம்

கொரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக சுய உதவிக் குழு மகளிர் பொருளாதார வசதி இன்றி தவிப்பதை தடுக்க சிறப்பு கடன் உதவி திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களால் அறிவிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான இந்த சிறப்பு கடன் திட்டத்தில் கீழ் ஏற்கனவே இரண்டு முறை கடன் பெற்று முறையாக செலுத்தி வரும் நன்கு செயல்பட்டு கொண்டு இருக்கும் மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு குறைந்தப்பட்சம் ரூ.5000/- முதல் அதிகப்பட்சம் ஒரு லட்சம் ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. இவ்வகை கடன் பெற்ற பெண்கள் 6 மாதம் கால வரை கடனை திரும்ப செலுத்துவதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்கு கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ரூ.175 கோடி இலக்கீடு நிர்ணயிக் கப்பட்டு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 7 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15 இலட்சம் கடன் வழங்கி திட்டத்தை துவக்கி வைத்தார்.

இதுவரை தொண்டாமுத்தூர் தொகுதிக்குட்பட்ட ஊரக பகுதிகளில் உள்ள தென்னம்மநல்லூர், தேவராயபுரம், இக்கரை போளுவாம்பட்டி, நரசீபுரம், ஜாகீர்நாயக்கன்பாளையம் மற்றும் மத்துவராயபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள 10 சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட் சிறப்புக் கடனாக ரூ.10 இலட்சம், வங்கி நேரடி கடனாக 35 சுய உதவிக் குழுக்களுக்கு 65 இலட்சம், கூட்டமைப்பின் மூலம் 10 நபர்களுக்கு ரூ. 5.50 இலட்சம் என ஊரகப் பகுதிகளில் 45 குழுக்களுக்கு மொத்தம் ரூ. 80.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தொண்டாமுத்தூர், வேடப்பட்டி, தாளியூர், தென்கரை, பேரூர், ஆலாந்துரை மற்றும் பூலுவப்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் உள்ள 40 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.4 இலட்சம், வங்கி நேரடிக் கடனாக 15 குழுக்களுக்கு ரூ. 40 இலட்சம், கோவிட் சிறப்புக் கடனாக 9 குழுக்களுக்கு ரூ.6.50 இலட்சம் என 64 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் ரூ.50.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குனியமுத்தூர், கரும்புக்கடை, கோவைப்புதூர், சுண்டக்காமுத்தூர், ஆர்.எஸ்.புரம் மற்றும் காந்தி பார்க் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட வார்டுகளில் உள்ள 49 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி ரூ.4.90 இலட்சம், கோவிட் சிறப்புக் கடனாக 52 குழுக்களுக்கு ரூ.49.90 இலட்சம், 3 குழுக்களுக்கு வங்கிக் குழுக் கடன் ரூ.13.50 இலட்சம் மற்றும் 13 குழுக்களுக்கு வட்டி மானியம் என ரூ.1,15,920 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தீத்திபாளையம் ஊராட்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்கடன் ரூ.1.20 இலட்சம், 2 நபர்களுக்கு தனிநபர் கடன் ரூ.10 ஆயிரம், 1 குழுவிற்கு கோவிட்19 சிறப்புக் கடன் ரூ.50 ஆயிரம் ஆகியவை வழங்கப்பட்டன. அதேபோல் மாதம்பட்டி ஊராட்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து தொழிற்கடன் 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.20 இலட்சமும், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் 5 நபர்களுக்கு ரூ. 25 ஆயிரமும் கடனாக வழங்கப்பட்டன. மேலும் மதுக்கரை பேரூராட்சிக்குட்பட்ட அறிவொளி நகரில் உள்ள 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி ரூ.40 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பொள்ளாச்சி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி. மகேந்திரன், கிணத்துகடவு சட்டமன்ற உறுப்பினர் திரு. எட்டிமடை கே. சண்முகம், கோயமுத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. சி. இரமேஷ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழக நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில் 02.07.2020 அன்று சென்னையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே. எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்ட தலைமை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் ஆய்வு

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் அவர்கள், சென்னை மாநகராட்சி அடையாறு (13வது) மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான திருவான்மியூர் புத்திர காளியம்மன் கோவில் தெரு மற்றும் கண்ணகி நகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவிட்19 தடுப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்து, அப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், கோவிட்19 குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களையும் வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

கொரோனா வைரஸ் பாதிப்பினால் வாழ்வாதாரம் இழந்த மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு சிறப்புக் கடன் உதவி வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சிறப்பு கடன் உதவி திட்டம், தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு கடன் திட்டத்தின் மூலம் சுயஉதவிக் குழுக்களின் மகளிர் பயனடைந்து வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பு கடன் உதவி வழங்கும் நிகழ்ச்சி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. பொன்னையா, இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பெஞ்சமின் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 400 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 2.65 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. சீனிவாசராவ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் மகளிர் திட்டம் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட்-19 சிறப்புக் கடன் மற்றும் வங்கி இணைப்பு கடன் வழங்கும் நிகழ்ச்சி 12.06.2020 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வளர்ச்சி மன்றக் கூட்ட அரங்கில் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 292 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 3504 பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ரூ. 7.74 கோடி கடனுதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. க. அருண்மணி, சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ. பழனீஸ்வரி, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கியின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பு கடன் உதவி வழங்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் இராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு, 50 சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள 684 உறுப்பினர்களுக்கு ரூ.34.20 இலட்சம் மதிப்பிலான கோவிட் 19 சிறப்பு கடனுதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், அரசு அலுவலர்கள், கூட்டுறவு சங்கங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி அடையாறு மண்டலம், கோட்டூர்புரம் ஏரிக்கரை சாலையில் உள்ள ஜிப்சி காலனியில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு சென்னை கொரோனா தடுப்பு சிறப்பு அதிகாரி/வருவாய் நிர்வாக ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் 23.05.2020 அன்று முகக்கவசங்களை வழங்கி கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் அடையாறு மண்டல சிறப்பு அலுவலர்/தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், மண்டல அலுவலர் திரு. என். திருமுருகன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி அடையாறு 13வது மண்டல அலுவலகத்தில் 03.06.2020 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர்(பொ) முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரு.எஸ்.கண்ணபிரான், திரு.பெ.அரவிந்தன், உதவி திட்ட அலுவலர் திரு.ஏ.ரவி, காவல்துணை கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஏ.சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி அடையாறு 13வது மண்டலம் ஆதம்பாக்கம், டாக்டர் அம்பேத்கர் நகர் 20வது குறுக்கு தெருவில் உள்ள பொதுமக்களிடம் 03.06.2020 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர்(பொ) முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரு.எஸ்.கண்ணபிரான், திரு.பெ.அரவிந்தன், உதவி திட்ட அலுவலர் திரு.ஏ.ரவி, காவல்துணை கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஏ.சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் நம் தமிழகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா வைரஸ் தொற்று பரவலில் இருந்து தமிழக மக்களைக் காத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில் அனைத்துத் துறை அமைச்சர் பெருமக்களும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., ஆகியோரின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பிற்காக பயன்படுத்தப்படும் முகக் கவசங்கள், கிருமி நாசினிகள், கை கழுவும் திரவங்கள், பாதுகாப்பு உடைகள் போன்றவற்றை தரமாக தயாரித்து விற்பனை செய்வதுடன், கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், கபசுர குடிநீர் வழங்குதல், சமூக இடைவெளியைக் கடைபிடித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முகக்கவசங்கள் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றைத் தயாரிக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்.

கன்னியாகுமரி மாவட்டம்

முகக்கவசங்கள் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றைத் தயாரிக்கும் கன்னியாகுமரி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள்.

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் விளார் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தூய்மைக் காவலர்கள் மற்றும் முதியோர்களுக்குத் தேவையான அரிசி மற்றும் மளிகைப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் வழிகாட்டுதலின்படியும், திருமழிசையில் தற்காலிகமாக அமைந்துள்ள காய்கறி அங்காடியில் செயல்பட்டு வரும் சுமார் 200 கடைகளுக்கு வரும் வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிரமமின்றி சிற்றுண்டிகள் கிடைக்கும் வகையில் சிற்றுண்டி கடைகளும், தொற்றுநோய் பரவாமல் இருக்க முகக் கவசம் மற்றும் கிருமிநாசினியும் கிடைக்க மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கடைகள் அமைக்கப்பட்டு பயனடையும் வகையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சிற்றுண்டிகள், கிருமிநாசினி மற்றும் முகக் கவசம் போன்றவை தட்டுபாடின்றி கிடைத்திட செய்தமையால் மகளிர் சுய உதவிக் குழுவினரின் செயல்பாடுகள் பொதுமக்களிடையே மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்தில் கொரோனா ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட நலிவடைந்த குடும்பத்தினர்களுக்கு செம்பனார்கோவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில் நலத்திட்ட உதவிகளை நாகப்பட்டிணம் மாவட்டம் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கொரோனா வைரஸ் தொற்று குறித்த விழிப்புணர்வை அனைத்து பகுதியிலும் வழங்கி வருகின்றனர்.

மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பொருட்களை தயாரிப்பதுடன் MinMathi செயலி மூலம் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் முகக்கவசங்கள், கிருமிநாசினிகள் போன்றவற்றை தயாரித்து வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள், விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம்

தருமபுரி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் முகக் கவசம், கிருமிநாசினி, கைகழுவும் சோப்புகள், லைசால் மற்றும் கவச உடைகள் ஆகியவற்றை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தருமபுரி மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் முகக் கவசங்கள், கிருமி நாசினிகள் போன்றவற்றை தயாரித்து வருவதுடன், கிருமி நாசினிகளை அனைத்துப் பகுதியிலும் தெளித்தல், முகக் கவசங்கள் மற்றும் கபசுர குடிநீர் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் கொரோனா ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதித்த நிலையில் உள்ளவர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் மூலம் உணவு, அரிசி மற்றும் மளிகைப் பொருட்களை வழங்கிய சுய உதவிக் குழுக்கள் கிராமங்களில் நோய் தொற்று பரவாமல் காக்க கிருமிநாசினிகளையும் தெளித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டத்தில் கிருமிநாசினிகளைத் தயாரிக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்.

திருப்பூர் மாவட்டம்

திருப்பூர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட முகக் கவசம், கிருமிநாசினி போன்றவைகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார்.

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்ட சுய உதவிக் குழுக்கள் முகக் கவசம் மற்றும் கிருமி நாசினிகளைத் தயாரித்து வழங்கி வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் முகக் கவசம், கிருமிநாசினி போன்றவைகள் தயாரிப்பதுடன், கொரோனா குறித்த விழிப்புணர்வும் மக்களுக்கு வழங்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம்

கோவிட்-19 தடுப்பு நடவடிக்கைகளுக்காக திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சமுதாய அமைப்பாளர்கள், சமுதாய வள பயிற்றுனர்கள் மற்றும் சுய உதவிக் குழு தூய்மைக் காவலர்களால் கிருமி நாசினிப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம்

சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட்-19 சிறப்பு கடனுதவி வழங்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான ஆய்வுக்குழு கூட்டத்தில், கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக வேலைவாய்ப்பின்றி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள தெய்வ மகள், பாரதமாதா ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட்-19 சிறப்புக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் கடனுதவியாக ரூபாய் இரண்டு இலட்சத்திற்கான வரைவோலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. சீனிவாசராவ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர், பல்வேறு வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோவிட்-19 சிறப்புக் கடனுதவி திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படும் 401 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3.05 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் வங்கி நேரடி கடனாக ரூ. 8.59 கோடி 155 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பு நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம்

மாவட்ட அளவிலான ஆய்வுக்குழு கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மாவட்ட அளவிலான ஆய்வுக்குழு கூட்டம் 08.06.2020 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. பொன்னையா, இ.ஆ.ப.,அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வங்கிகளுக்கு 2020-21 ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வங்கி வாரியான இலக்கு குறித்த விபரங்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இக்கூட்டத்தில் கொரானாவால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி கொள்வதற்காக வழங்கப்படும் கோவிட்-19 சிறப்புக் கடனுதவி மற்றும் நேரடி கடன் ஆகியவற்றை வழங்கிடுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. சீனிவாசராவ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர், பல்வேறு வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம்

கோவிட்-19 தடுப்பு நடவடிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டம்

நாமக்கல் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கோவிட்-19 தடுப்பு நடவடிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டம் நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி வாரியாக கண்காணிப்பு குழு அமைத்து செயல்படுதல், கோவிட்-19 நோயினை தடுக்க எடுக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், சுய உதவிக்குழு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய தலைவர், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி செயலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட் -19 சிறப்பு கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

மதுரை மாவட்டம்

அமுத சுரபி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

மதுரை மாநகராட்சி ஒன்றாவது மண்டலம், 17வது வார்டில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமுதசுரபி மகளிர் சுய உதவிக்குழு 2016ஆம் ஆண்டு திருமதி. எஸ். ராஜாமணி அவர்கள் தலைமையில் துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, எல்லிஸ் நகர் கிளையின் மூலம் தொழிற்கடனாக ரூ.8 லட்சம் பெற்று, கிரில் கதவுகள், மாடிப்படி கைப்பிடிகள், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கதவுகள் மற்றும் மதுரை மாநகராட்சி பகுதியில் உள்ள தெருக்களின் பெயர் பலகைகள் போன்றவற்றை சிறந்த முறையில் செய்து கொடுத்து வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுக்க ஊரடங்கு காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசு பல்வேறு முயற்சிகள் செய்து வருகின்ற சந்தர்ப்பத்தில் அமுதசுரபி மகளிர் சுய உதவிக் குழு கைகழுவும் கிருமி நாசினி நிறுத்தம் (Sanitizer Stand) தயார் செய்து விற்பனை செய்து வருகிறது. ஊரடங்கு தளர்வு செய்யப்பட்ட மே மாதத்தில் இப்பணியை மேற்கொண்டு வருகிறது. இதற்கு தேவைப்படும் பொருட்களை உள்ளூரில் கொள்முதல் செய்து, அமுதசுரபி மகளிர் குழு உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஆண் உறுப்பினர்கள் கட்டிங், வெல்டிங் போன்ற பணிகளை மேற்கொண்டு கைகழுவும் கிருமி நாசினி நிறுத்தங்களை தயார் செய்து ரூ. 2,500/-க்கு விற்பனைச் செய்து வருகின்றனர். கடந்த மே மாதம் முதல் இந்நாள் வரை சுமார் 50 எண்ணிக்கையிலான ஸ்டேண்டுகளைத் தயார் செய்து விற்பனை செய்துள்ளனர். TNSRLM, DMMU, IOB Bank, Central Bank of India, MDCC Bank, ராம்ராஜ் வேஷ்டிகள் போன்ற நிறுவனங்களுக்கு கைகழுவும் கிருமி நாசினி நிறுத்தங்களை விநியோகம் செய்துள்ளனர். ஒரு நாளைக்கு 4 முதல் 5 எண்ணிக்கையிலான ஸ்டேண்டுகள் தயாரிக்க வாய்ப்பு உள்ளதாக அமுதசுரபி மகளிர் குழுவினர் கூறுகின்றனர்.

கோவிட்-19 தடுப்பு நடவடிக்கை மூலம் அமுதசுரபி மகளிர் சுய உதவிக் குழு தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ளும் முனைப்புடன் செயல்படுவது மட்டுமல்லாது, அப்பகுதி ஏழை எளியோருக்கு முகக் கவசம், கபசுர குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட ஏனைய உதவிகளை செய்து வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம்

முகக்கவசம் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள்

புதுக்கோட்டை மாவட்டம், பூங்கா நகரில் செயல்படும் மணிக்குயில் மகளிர் சுய உதவிக் குழு தற்சமயம் கொரோனா பாதிப்பை தவிர்க்கும் பொருட்டு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலமாக பயிற்சி பெற்று முகக் கவசம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். முகக் கவசம் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்களை சிவகாசியிலிருந்து வரவழைக்கின்றனர். நான்ஓவன் மற்றும் காட்டன் துணிகளைப் பயன்படுத்தி இரண்டுவித முகக்கவசங்களை தயாரிக்கின்றனர். நான் ஓவன் முகக்கவசம் ரூ.10/-ற்கும், காட்டன் முகக் கவசம் ரூ.13/-ற்கும் விற்பனை செய்கின்றனர். இதுவரை ஒரு லட்சம் முகக் கவசங்களை உற்பத்தி செய்து புதுக்கோட்டை மாவட்டம் முழுவதிற்கும் வழங்கியுள்ளதுடன், பிற மாவட்டங்களுக்கும் விற்பனை செய்து வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இக்குழுவின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மணிக்குயில் சுய உதவிக் குழுவைப் போல் கீழ்கண்ட முகவரியில் செயல்படும் மேலும் இரு மகளிர் சுய உதவிக் குழுக்கள் முகக் கவசம் தயரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

திருமதி. இன்பவள்ளி,
மணிக்குயில் மகளிர் சுய உதவிக் குழு,
புதுக்கோட்டை
செல்பேசி : 94430 16317

திருமதி. கண்ணகி,
அச்சுடம் அன்னை மகளிர் சுய உதவிக் குழு, புதுக்கோட்டை
செல்பேசி : 73394 77416

திருமதி. எஸ். சீதா,
சூரியா மகளிர் சுய உதவிக் குழு,
புதுக்கோட்டை

தேனி மாவட்டம்

மூங்கிலில் கலைப்பொருட்கள் தயாரிக்கும் அம்பிகை உதவிக் குழுவினர்

தேனி மாவட்டம், கூடலூர் ஊராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 15 பெண்கள் ஒன்று சேர்ந்து நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் அம்பிகை மகளிர் சுய உதவிக் குழு என்ற பெயரில் குழுவினைத் துவங்கி, கூடலூர் கனரா வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்குத் துவங்கி, நல்ல முறையில் வரவு, செலவு செய்து குழுவை நடத்தி வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்கள் மூங்கில் கூடை முடையும் தொழிலை செய்து வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு வருக்கும் வங்கியின் மூலம் நேரடிக் கடனாக ரூ. 50,000/- வீதம் கடன் வழங்கப்பட்டது. இத்தொகையினைக் கொண்டு மூங்கில் கூடைகள் செய்வதற்கான மூலப் பொருட்களை வாங்கி, கூடை, முறம், தட்டு, பஞ்சாரம், கோவிலுக்கு கொண்டு செல்லும் பூக்கூடை மற்றும் விளையாட்டுப் பொருட்கள் என பலவிதமான பொருட்ளைத் தயாரித்து விற்பனை செய்து கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர்.

தற்போது இவர்களது குடும்பங்களின் பொருளாதார நிலை உயர்ந்து, வறுமை நீங்கி வருகின்றது. வங்கியில் வாங்கிய கடனையும் முறையாக மாதந்தோறும் திரும்பச் செலுத்தி வருகின்றனர். வங்கிக் கடனை திரும்பச் செலுத்தியவுடன் மேலும் கடன் பெற்று தங்களின் தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்று அம்பிகை மகளிர் சுய உதவிக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் முழு மனதுடன் தீர்மானம் செய்துள்ளதுடன், தங்களின் வளர்ச்சிக்கு வழி காட்டிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத் திற்கு தங்களின் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றனர்.

விருதுநகர் மாவட்டம்

கொரோனா பேரிடர் நேரத்தில் கைகொடுத்த 3வது வார்டு ஆகர்ஷணா பகுதி அளவிலான கூட்டமைப்பு (ALF)

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி பேரூராட்சியில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் 2016 முதல் அமைக்கப்பட்ட 12 மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஒற்றுமை மற்றும் நீடித்த செயல்பாட்டின் பலனாக 21.09.2019 அன்று 3வது வார்டு ஆகர்ஷணா பகுதி அளவிலான கூட்டமைப்பு தொடங்கப்பட்டது. இக்கூட்டமைப்பில் இணைந்துள்ள 12 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர் அனைவரும் ஆடைகள் தயாரித்தல் மற்றும் வீடுதோறும் சென்று சிறிய அளவிலான ஜவுளி விற்பனை செய்து வரும் பெண்கள் ஆவர்.

தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினால் நடத்தப்படும் திறன் மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சியின் மூலம் 7 பெண்கள் முறையான தையல் பயிற்சி பெற்று, 2 பெண்கள் சுயமாக ஆடைகள் தயாரிப்புத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனார். இந்த குழுக்களின் உறுப்பினர்கள் மேற்கொண்டு வரும் தையல் தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்கள் வாங்குவதற்குத் தேவையான நிதியை குறைந்த வட்டியில் வழங்கியதில் யூனியன் பேங்க் ஆப் இந்தியா முக்கிய பங்காற்றியது. இதுவரை ரூ. 22 லட்சத்திற்கும் அதிகமான கடன்களை குழு உறுப்பினர்கள் பெற்று முறையாக செலுத்தியதன் பயனாக பல ஆயிரம் ரூபாய் மானிய தொகையாகப் பெற்றுள்ளனர்.

இந்தக் கூட்டமைப்பின் உறுப்பினர்களின் வாழ்வாதாரம் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநரின் வழிகாட்டுதலின்படி, இக்கூட்டமைப்பிற்கு 29-04-2020 அன்று விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் ரூ. 20 லட்சம் வழங்கப்பட்டது. இந்த சூழ்நிலையில் கொரோனா என்னும் கொடிய வைரஸால் தாக்கப்பட்டு அனைத்து மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் இக்கூட்டமைப்பில் உள்ள 126 உறுப்பினர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியானது. கூட்டமைப்பின் சார்பில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ரூ. 15,800/- வீதம் உள் கடனாகக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் இந்தக் கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளவர்களின் குடும்பங்களின் பசியையும், வாழ்வையும் பேணி பாதுகாத்துக் கொள்ள முடிந்தது.

இந்த பேரிடர் சுழலில் இக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முறையாக வங்கி கடனைத் திரும்ப செலுத்தியதன் பயனாக யூனியன் பேங்க் ஆப் இந்தியா மூலம் கூட்டமைப்பைச் சேர்ந்த 126 உறுப்பினருக்கும் தலா ரூ.5000/- வீதம் கொரோனா சிறப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி இக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தொழிலை மீண்டும் தொடங்க பேருதவியாக இருந்தது. கொரோனா பேரிடர் என்னும் இருளில் தங்களுக்கு வழிகாட்டியாக இருந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு 3வது வார்டு ஆகர்ஷணா பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

திருநெல்வேலி மாவட்டம்

தாமரை மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கோவிட்-19 சிறப்புக் கடனுதவி

திருநெல்வேலி மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், சேரன்மகாதேவி பேரூராட்சியில் செயல்பட்டு வரும் தாமரை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களுக்கு கோவிட்-19 சிறப்பு கடனுதவி வழங்கப்பட்டது. இதன்படி ஒரு நபருக்கு ரூ. 50,000/- வீதம் 20 நபர்களுக்கு ரூ.10 லட்சம் கடன் பெற்றுத் தரப்பட்டது. இக்கடன் தொகையைப் பெற்ற தாமரை சுய உதவிக் குழுவின் 12 நபர்கள் கூட்டாக இணைந்து ஆயத்த ஆடை தயாரிப்பு தொழில் நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். 8 நபர்கள் தனித்தனியாக 15 ஆடுகள் வீதம் வாங்கி ஆடு வளர்ப்புத் தொழில் செய்து வருகின்றனர்.

தொண்டை கரகரப்பை போக்கும் பூண்டு மிளகு சாதம்

காற்றோட்டம் இல்லாமல் வீட்டுக்குள்ளே இருப்பவர்களுக்கும். குளிரூட்டியை பயன்படுத்தி வீட்டுக்குள்ளே இருப்பவர்களுக்கும் சளி பிடிக்கு வாய்ப்புகள் அதிகம். சில நேரங்களில் தொண்டை கரகரப்பாக இருக்கலாம். அவர்கள், பூண்டு, மிளகு சேர்த்து சாதம் செய்து சாப்பிடலாம். இந்த சாதம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

தேவையான பொருட்கள் :

பாஸ்மதி (சாதம்)-ஒரு கப், கடுகு, உளுந்து மற்றும் கடலை பருப்பு தலா அரை தேக்கரண்டி, காய்ந்த மிளகாய்-3, வெங்காயம்-ஒன்று, பூண்டு-10பல், மிளகுத்தூள்-ஒரு தேக்கரண்டி கறிவேப்பிலை மற்றும் கொத்தமல்லித்தழை சிறிதளவு, நெய், உப்பு-தேவைக்கு

செய்முறை :

வெங்காயம், கொத்தமல்லி, பூண்டை பொடியாக நறுக்கி கொள்ளவும். வாணலியை அடுப்பில் வைத்து நெய் விட்டு உருகியதும், கடுகு, உளுந்து, கடலைப் பருப்பு சேர்த்து தாளிக்கவும். கூடவே, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலையை சேர்த்து வதக்கவும். பின்னர், பொடியாக நறுக்கிய வெங்காயம் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும். பொடியாக நறுக்கிய பூண்டு, உப்பு சேர்த்து வதக்கவும். இந்நிலையில், சாதம் சேர்த்து நன்றாக கிளறவும். இறுதியாக, மிளகுத்தூள், கொத்தமல்லித்தழை சேர்த்து கலந்து 2 நிமிடங்கள் கழித்து இறக்கி சுடச்சுட பரிமாறவும்.

பப்பாளி பழத்தின் நன்மைகள்

பப்பாளி பழத்தில், இயற்கையாகவே விஷக்கிருமிகளை கொல்லும் சக்தி உள்ளது. உடலின் மெட்டபாலிசத்தை ஊக்குவிக்க வேண்டுமானால், பப்பாளி பழத்தை உண்ணுங்கள். அதில் போலிக் அமிலம் வடிவில் வைட்டமின் பி, வைட்டமின் பி6 மற்றும் ரிபோஃப்ளேவின் ஆகியவை அடங்கியுள்ளது. வைட்டமின் ஏ குறைபாடு இருந்தால், கண்டிப்பாக பப்பாளி பழம் உண்ண வேண்டும். ஏனெனில் இதில் வைட்டமின் ஏ, கால்சியம் மற்றும் பொட்டாசியம் அதிகம் உள்ளது.

பல் சம்மந்தமான குறைபாட்டிற்கும், சிறுநீர்ப்பையில் உண்டாகும் கல்லை கரைக்கவும், பப்பாளி சாப்பிட்டால் போதும். மேலும் நரம்புகள் பலப்படவும், ரத்த விருத்தி உண்டாகவும், ஞாபக சக்தியை உண்டு பண்ணவும் பப்பாளி சாப்பிடுங்கள். மலச்சிக்கல் பிரச்சனைக்கு இந்த பழத்தை சாப்பிட்டு பாருங்கள். இது மலச்சிக்கலை நீக்கி, செரிமானத்திற்கு உறுதுணையாக இருக்கும். குறைவான கலோரிகளும், நிறைய ஊட்டச்சத்துக்களும் உள்ள பப்பாளியை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். செரிமானத்திற்கு உதவி செய்வதால், இது உடல் எடையை குறைக்கவும் உதவும். முகப்பரு உள்ளவர்கள், பப்பாளிக்காயின் நறுக்கிய உட்பகுதித் துண்டுகளை மென்மையாக முகத்தில் தேய்க்க வேண்டும். இது முகப்பருக்களைப் போக்கி, முகச் சுருக்கங்களையும் நீக்கி, பொலிவு கூட்டும். பப்பாளிப் பழத்தை தேனில் கலந்து சாப்பிட்டால் நரம்பு தளர்ச்சி குணமாகும்.

நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் உணவுகள்!

இப்போது, ஒவ்வொருவரும் நோய் எதிர்ப்பாற்றலை உருவாக்கிக் கொள்ளும் காலத்தில் இருக்கிறோம். அதனால், முடிந்தவரை கீழே குறிப்பிட்ட உணவுகளில் ஒரு நாளில் ஒன்றிரண்டாவது எடுத்துக் கொள்ளுங்கள்.

பூண்டு

பூண்டு ரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும், ஹார் மோன்களைக் கட்டுப்படுத்தவும் செய்யும் அருமை யான குணங்களைக் கொண்டுள்ளது. எதிர்ப்பு சக்தியைப் பொறுத்த விஷயத்தில் பூண்டின் பங்கு மிகவும் அருமையானது. இதில் உள்ள அல்லிசின் என்னும் பொருள் பாக்டீரியாக்களையும், தொற்றுக் களையும் கொல்லவல்லது.

இஞ்சி

நுண்ணுயிர்களுக்கு எதிராகப் போராடும் சக்தி இஞ்சிக்கு உண்டு. இதில் அதிக அளவு ஆன்டி ஆக்ஸிடன்ட்டுகள் எனப்படும் உடலை காக்கும் பொருள் நிறைந்துள்ளது.

தயிர்

தயிரில் உடலுக்கு நல்லது செய்யும் நுண்ணு யிர்கள் நிறைந்துள்ளன. இந்த நல்ல நுண்ணுயிர்கள் செரிமான உறுப்புகளை குறிப்பாக குடற்பகுதியை நல்ல நிலையில் வைக்க உதவுகின்றன. ஆரோக்கி யமான செரிமான மண்டலம் ஒரு நல்ல நோய் எதிர்ப்பு சக்தியை உறுதி செய்யும்.

சர்க்கரைவள்ளி கிழங்கு

பெரும்பாலும் குறைத்து மதிப்பிடப்படும் இந்தக் கிழங்கு இணைப்புத் திசுக்களின் உற் பத்திக்கு உதவும் வைட்டமின் ஏ சத்தை அதிகம் கொண்டுள்ளது. சர்க்கரைவள்ளிக் கிழங்கு உடல் சருமத்தை தொற்று மற்றும் நுண்ணுயிர் தாக்குதலில் இருந்து காக்கிறது. உங்கள் சருமம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதில் முக்கிய பங்காற்று கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எலுமிச்சை

எலுமிச்சையில் அதிக அளவு வைட்டமின் சி சத்து காணப்படுகிறது. இதில் காணப்படும் பிற சத்துக்களும் இணைந்து நோய் எதிர்ப்பு சக்திக்கு உந்துதலை அளிக்கிறது.

முற்றக் கச்சேரி 2.0

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்.
கதை மாந்தர்கள் : ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் மீனா, கீதா மற்றும் லதா

சுய உதவிக் குழு அலுவலகத்தில் ஊக்குநர் மதி அமர்ந்திருக்கிறார். உறுப்பினர்கள் மீனா, கீதா மற்றும் லதா ஆகியோர் இருசக்கர வாகனங்களில் வருகின்றனர். மூவரும் அலுவலகத்தின் வெளியே உள்ள தண்ணீர் குழாயில் தங்களின் கைகளை சோப்பு போட்டு நன்கு கழுவி விட்டு வருகின்றனர். ஒவ்வொருவரும் முகக் கவசம் அணிந்து கொண்டிருக்கின்றனர்.

மதி: வா... மீனா... வா கீதா... வா லதா வாங்க... வாங்க... வந்து உட்காருங்க...

உறுப்பினர்கள் மூவரும் தாங்கள் வந்த இருசக்கர வாகனங்களில் இருந்து பெரிய பைகளை எடுத்து வந்து மதியின் முன் வைத்து விட்டு, இடைவெளி விட்டு அமருகின்றனர்.

மதி: கொரோனா தடுப்புக்காக நம் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட நம்ம சுய உதவிக் குழுவுல தயாரித்த பொருட்களை எடுத்திட்டு வந்திருக்கீங்களா?

லதா: ஆமா அக்கா, இந்த மூணு பைகளிலும் முகக் கவசம், கிருமிநாசினி, கைகழுவும் சோப்பு போன்றவை இருக்கு அக்கா...

மதி: ரொம்ப சந்தோசம். நம்ம நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுய உதவிக் குழு சார்பாக தயாரிக்கப்பட்ட இந்தப் பொருட்கள உடனே நாம நம்ம பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு (CLC) அனுப்பி வைக்கலாம். சரியா?

கீதா: சரி அக்கா... இந்தப் பொருட்கள எந்தக் கடையில எப்படி விற்பனை செய்யப் போறாங்க...? அதப் பத்தி கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்களேன்.

மதி: நம்ம நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC), நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்ட அலுவலகங்கள், ஆட்சியர் அலுவலகங்கள், பொது மக்கள் கூடும் பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சார்பாக விற்பனை அரங்குகள் அமைச்சு விற்பனை செய்யறாங்க. நம்ம தலைமைச் செயலகத்துல கூட அரங்கு அமைச்சு விற்பனை செய்யறாங்க.

மீனா: அப்படியா? பரவாயில்லையே. நாம தயாரிக்கிற பொருளுக்கு இவ்வளவு மவுசு இருக்கா?

மதி: என்ன பாலா அப்படி சொல்லிட்ட... சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கிற பொருள்கள் என்றாலே தரமாகவும், நியாயமான விலையிலும் இருக்கும் என்று அனைவருக்கும் தெரியும் தானே...

கீதா: அது சரி அக்கா... இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருக்கணும்?

மதி: நம்ம அரசாங்கம் அறிவிக்கும் வரைக்கும் நாம இப்படிதான் இருக்கணும்...

லதா: சரி அக்கா... கொரோனா தொற்று தடுப்புக்கு நம்ம அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்து வராங்க...

மதி: நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் அனைத்துத் துறை அமைச்சர்களும், அலுவலர்களும் கொரோனா தொற்று தடுப்புக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்திட்டு வராங்க...

மீனா: அதப்பத்தி கொஞ்சம் சொல்லுங்க அக்கா...

மதி: கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக நம்ம தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்திட்டு வருது. அமைச்சர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரும் இதற்காக செயல்பட்டு வராங்க.

லதா: அப்படியா...?

மதி: அதுமட்டுமில்ல நம்ம தமிழக அரசுதான் அதிக அளவில் கொரோனா பரிசோதனை

வணங்கிடுவோம்... வாழ்த்திடுவோம்...

அரசின் ஆணைக்குட்பட்டு,
அணிந்திடுவோம் முகக் கவசம்...
அனாவசியமாக அலைந்து திரியாமல்
அமைதியாக வீட்டிலிருப்போம்...

கிருமி நாசினி கொண்டு
அடிக்கடி கைகளைக் கழுவிடுவோம்...
சத்தான உணவுகளை சாப்பிடுவோம்...
சமூக இடைவெளியைக் கடைபிடிப்போம்...

கொடும் நோயாம் கொரோனாவை
விரட்டிட அயராது உழைத்திடும்
அனைவரையும் சிரம் தாழ்த்தி
வணங்கிடுவோம்... வாழ்த்திடுவோம்...

● **தீபிகா கார்த்திக்,**
திருத்தவெளி கிராமம்.

கருவிகளை கொள்முதல் செய்து, அதன் மூலம் கொரோனா தொற்று உள்ளவர்களை எளிதில் கண்டறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சையளித்து கொரோனா பரவலை முதல் நிலையிலேயே தடுத்து நிறுத்தி வருகிறது. கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் தமிழக அரசு தான் முதன்மை மாநிலமாக இருக்கு...

கீதா: அட...

மதி: இன்னும் சொல்றேன் கேளு... நம்ம தமிழக அரசு தான் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

மீனா: நம்ம அரசு எப்பவுமே முதலிடம்தான்...

மதி: அதுமட்டுமில்ல... சுய உதவிக் குழுக்கள் கொரோனா தடுப்புக்கான முகக் கவசங்கள், கிருமிநாசினி, கைகழுவும் சோப்பு போன்றவற்றை தயாரிக்க தேவைப்படும் மூலதனத்திற்காக சிறப்பு கடனுதவிகளையும் நம்ம ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார். அதன் காரணமாக நம்ம சுய உதவிக் குழுக்கள் ஆர்வத்தோட கொரோனா தடுப்பு பொருட்களைத் தயாரித்து வருகிறார்கள்.

கீதா: சரி மதி அக்கா... கொரோனா தடுப்புக்காக நம்ம மகளிர் சுய உதவிக் குழுக்கள் செய்யும் செயல்பாடுகளைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்...

மதி: என்ன இப்படி கேட்டுட்ட கீதா... கொரோனா பரவல் தடுப்புக்காக தமிழ்நாட்டில் செயல்படும் பெரும் பாலான சுய உதவிக் குழுக்கள் முகக் கவசம், கிருமிநாசினி, கைகழுவும் சோப்பு, கவச உடை போன்றவற்றை தரமாக தயாரிச்சு தராங்க... மேலும் கொரோனா தடுப்பு கணக்கெடுப்புப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளும் செய்து வருகிறார்கள். அனைத்து மாவட்டத்திலும் உள்ள சுய உதவிக் குழுக்கள் கொரோனா தொற்றுக்கு எதிராக மேற்கொண்டு வரும் செயல்பாடுகளை வண்ணப்படங்களா இந்த மாச முற்றம் இதழில் வெளி யிட்டிருக்காங்களே பார்க்கலையா நீ...?

கீதா: அட ஆமா அக்கா... நம்ம சுய உதவிக் குழுக்களுக்கு ஈடு இணையே கிடையாது அக்கா...

லதா: சரியா சொன்ன கீதா...

கீதா: கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக நாம என்ன செய்யலாம் அக்கா...?

மீனா: அதுதான் முகக் கவசம், கிருமிநாசினி, சோப்பு என தயாரிக்கிறோமே...

மதி: இந்தப் பொருட்களத் தயாரிக்கிறது முக்கியமில்ல... கொரோனா தடுப்பு குறித்து விழிப்புணர்வையும் ஏற்படுத்தணும். அரசின் அறிவிப்புக்கும் நம்ம ஒத்துழைப்பை தரணும். மற்றவர்களையும் பின்பற்ற சொல்லணும்.

லதா-கீதா-மீனா: கண்டிப்பா சொல்றோம் அக்கா...

மதி: ரொம்ப சந்தோசம். இன்னும் கொஞ்ச நாளைக்கு நாம பாதுகாப்பா, தனி மனித இடைவெளியோட முகக் கவசம் அணிந்து, கிருமிநாசினிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதை மறந்திடாதீங்க. மற்றவர்களையும் இதைக் கடைபிடிக்கச் சொல்லுங்க. சரியா...

லதா, கீதா, மீனா மூவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் DDU-GKYன் முதன்மை இயக்கு அலுவலர் பாராளுமன்ற நிலைக்குழுவின் வல்லுனர் குழுவில் முதன்மை உறுப்பினராக நியமனம்

தேசிய அளவில் அரசு அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பாராட்டி ஆண்டுதோறும் சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கும் SKOCH அமைப்பின் மூலமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் DDU-GKY திட்டத்தின் செயல்பாடுகளை பாராட்டி விருதுகள் வழங்குகிறது.

குறிப்பாக 2019-2020ஆம் ஆண்டிற்கான ஆளுமைத்திறன் நடவடிக்கைகள் (Governance Practices) மற்றும் தொழில் நிறுவனங்களுடன் கூட்டாண்மை (Industry Partnership) ஆகிய செயல்பாடுகளைப் பாராட்டி 'ஆர்டர் ஆப் மெரிட்' (Order of Merit) சான்றிதழ் வழங்கப் பட்டதுடன், 'டிஜிட்டல் டேட்டா பேஸ்' மற்றும் 'கௌசல் பஞ்சி' செயல்பாட்டிற்காக தேசிய அளவில் தங்கப்பட்டய விருதும் (Golden Merit) வழங்கி கௌரவித்தது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் செயல்பாடுகளுக்கு மேலும் ஒரு மணி மகுடமாக சமீபத்தில் பாராளுமன்ற நிலைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட வல்லுநர்களுக்கான குழுக்களில் 'இந்தியாவில் தயாரிப்பது எனும் தொலைநோக்கு குறிக்கோள் DDU-GKY திட்டத்தின் மூலம் சாதித்தல் (Realisation Vision Make in India under DDU-GKY) எனும் குழுவிற்கு மூன்று வல்லுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவில் முதன்மை உறுப்பினராக DDU-GKY திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா அவர்கள் மத்திய ஊரக அமைச்சகத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டப் பயனாளிகளுக்கான பணி வாய்ப்பு

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற இளைஞர்களுக்கு 40க்கும் மேற்பட்ட துறைகளில் பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கி, முன்னணி தனியார் நிறுவனங்களில் பணி அமர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் தமிழகத்தில் சுகாதாரத் துறையில் 2019-2020ஆம் ஆண்டில் 2584 இளைஞர்கள் பயிற்சி முடித்துள்ளனர். பயிற்சி முடித்து பல்வேறு மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்களில் பணி செய்து வந்த இவ் இளைஞர்களில் சிலர், கோவிட்-19 தேசிய ஊரடங்கு காரணமாக தற்காலிகமாக பணியிழந்து சொந்த ஊர் திரும்பியுள்ளனர்.

இதில் கோவிட்-19 ஒழிப்புப் பணியில் ஈடுபட ஆர்வம் தெரிவித்த 543 இளைஞர்களில் வாய்ப்புள்ளவர்களுக்கு அவரவர் மாவட்டத்திலேயே மருத்துவத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகங்களில் தற்காலிகமாக பணியமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் DDU-GKY திட்டத்தின் கீழ் சுகாதாரத் துறையில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் கோவிட்-19 ஒழிப்பு பணிக்கு உறுதுணையாக இருந்ததுடன், தேசிய ஊரடங்கால் பணியிழந்த இளைஞர்களுக்கு ஓரளவிற்கு ஊதியம் ஈட்டவும் தற்காலிகமாக வழி செய்தது.

மேலும் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் வெளியூர்களில் வேலை பார்த்து, தற்சமயம் கோவிட்-19 காரணமாக வேலை இழந்த ஊர் திரும்பிய இளைஞர்களின் விபரங்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் சேகரிக்கப்பட உள்ளது. இதன் மூலம் இத்தகைய இளைஞர்கள், புதியதாக தொழில் பயிற்சி பெறவோ அல்லது தொழில் பயிற்சி முடித்து தொழில் நிறுவனங்களில் பணியில் சேர்ந்திடவோ வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. பணி இழந்திருந்தாலோ 'கௌசல் பஞ்ச்' எனும் செயலியில் பதிவிடுவதன் மூலம் புதிய பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் குறித்த தகவல்களை எளிதில் அறிந்து பயன் பெறலாம்.

கோவிட் - 19 தடுப்புப் பணியில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் பங்கு

கிராமப்புற இளைஞர்களின் சுய தொழில் ஆர்வத்தை ஈடு செய்திடவும், அவர்களுக்கு உரிய தொழிற்பயிற்சிகள் அளித்து தொழில் முனைவோராக்கிடவும் மாவட்டந்தோறும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETI) செயல்பட்டு வருகின்றன. ஊரகப் பகுதியைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள இளைஞர்களுக்கான பயிற்சிக் கட்டணத்தை மத்திய ஊரக அமைச்சகம் ஏற்பதுடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) பிரிவு மூலம் முழுமையாக கண்காணிப்பும் செய்யப்படுகிறது.

நமது மாநிலத்தில் மாவட்டத்திற்கு 1 வீதம் 30 RSETI பயிற்சி நிறுவனங்கள் (சென்னை, சிவகங்கை நீங்கலாக) ஆதரவு வங்கிகளின் (Sponsor Banks) உதவியுடன் பல்வேறு திறன் வளர்ப்பு/ தொழில் மேம்பாட்டு பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

கொடும் தொற்று நோயான கோவிட் - 19ஐ எதிர் கொள்ளும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து RSETI பயிற்சி மையங்களும், ஏற்கனவே பயிற்சி பெற்ற தொழில் முனைவோர்/ பயிற்சியாளர்களைக் கொண்டு முகக்கவசம் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். 2020 மே 31 வரையிலான காலத்தில் 13.78 இலட்சம் எண்ணிக்கையிலான முகக்கவசங்கள் தயாரித்து நாட்டிலேயே RSETI மூலம் அதிகபட்ச முகக் கவசம் தயாரித்த மாநிலங்களில் தமிழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதில் குறிப்பாக அரியலூர் RSETI நாட்டிலேயே முதல் இடத்தையும், தஞ்சாவூர் RSETI நாட்டிலேயே மூன்றாவது இடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளன. மேலும் சில RSETI நிறுவனங்கள் கையுறை மற்றும் சுத்திகரிப்பான்கள் (Sanitizer) ஆகியவையும் தயாரித்து வருகின்றன.

உற்பத்தி செய்யப்பட்ட முகக் கவசங்கள், கையுறைகள், சுத்திகரிப்பான்களை மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவத்துறை ஆகியவற்றுக்கு வழங்கியுள்ளதுடன், உள்ளூர் தேவைகளுக்கும், சில்லறை விற்பனையாளர்களுக்கும் விற்பனை செய்துள்ளனர். இதன் மூலம் முகக் கவசத் தேவையை பூர்த்தி செய்திட உதவியதுடன், உற்பத்தியாளர்களுக்கும் முகக்கவசம் விற்பனை மூலம் கணிசமாக வருவாய் பெறவும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம்

உழைக்கும் மாற்றுத் திறனாளி மகளிருக்கு சிறப்பு அம்மா இருசக்கர வாகனம்

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியத்தில் 12.06.2020 வெள்ளிக்கிழமை அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற புதிய தாலுக்கா திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள், தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டம் சார்பாக எட்டு உழைக்கும் மாற்றுத் திறனாளி மகளிருக்கு சிறப்பு அம்மா மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார். தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர் திருமதி. பிரேமா மற்றும் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மூன்று சக்கர வாகனங்களுக்கு தமிழக அரசு அம்மா இருசக்கர வாகனத் திட்ட நிதியிலிருந்து ஒரு நபருக்கு ரூ. 31250/-வீதம் 8 நபர்களுக்கான மானியத் தொகை ரூ. 2,50,000/-மற்றும் சமுதாய பொறுப்பு நிதியிலிருந்து (CSR) வாகனத்திற்குரிய மீதக் கட்டணத் தொகையான ஒரு வாகனத்திற்கு ரூ. 25583/-வீதம் 8 நபர்களுக்கான தொகை ரூ. 2,04,664/-என ஆக மொத்தம் ரூ. 4,54,664/- விடுவிக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம்

மனம் இனிது சமூகப் பயிற்றுநர்களின் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு செயல்பாடுகள்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வீரராகவராவ், இ.ஆ.ப., ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கோ. குருநாதன் ஆகியோரின் வழிகாட்டுதலில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு பொருட்களான முகக் கவசங்கள், கிருமி நாசினி, கைகழுவும் சோப்பு போன்றவற்றை தயாரித்து வருகின்றனர். மேலும் தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடித்தல், அத்தியாவசியப் பொருட்களை வீட்டிற்கே கொண்டு வந்து தருதல் போன்றவற்றையும் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் பல்வேறு வங்கிகளின் மூலம் 124 சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட்-19 சிறப்புக் கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக மண்டபம் வட்டாரத்தில் மனம் இனிது சமூக பயிற்றுநர்கள் மூலம் முகக் கவசம் தயாரிக்கப்பட்டு காவல்துறை மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

கொரோனா தடுப்புப் பணியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் பணிகள்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகத் தொழில் மேம்பாட்டிற்காக ரூ. 300 கோடி மதிப்பீட்டில் கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்புத் திட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஊரகப் பகுதிகளில் சிறு, குறு, தனிநபர் மற்றும் குழு சார்ந்த தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகை செய்திடவும் தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களில் 120 வட்டாரங்களைச் சேர்ந்த 3,994 கிராம ஊராட்சிகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாக தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட கிராமப்புற தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், பல்வேறு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தனி நபர்கள், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர் மற்றும் பிற பகுதிகளிலிருந்து புலம் பெயர்ந்த இளைஞர்கள் புதிதாகத் தொழில் தொடங்கவும், ஏற்கனவே தொழில் செய்து கொண்டிருப்பின் அதனை மேம்படுத்திடவும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் 300 கோடி ரூபாய் மதிப்பில் மொத்தம் 1,39,574 பயனாளிகள் பயன்பெறும் வகையில் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்புத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் 28.05.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதற்கான அரசாணையும் பெறப்பட்டுள்ளது அதன்படி,

✦31,952 நபர்களுக்கு மொத்தம் 159 கோடியே 76 லட்சம் ரூபாய் நீண்டகால தனி நபர் தொழில் கடனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வழங்கப்படும்.

✦1,598 உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 31,960 நபர்கள் பயன் பெறும் வகையில் ஒருமுறை மூலதன மானியமாக குழு ஒன்றுக்கு (20 நபர்கள்) 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 23 கோடியே 97 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

✦குழு ஒன்றுக்கு 5 பயனாளிகள் அடங்கிய 240 தொழில் குழுக்களுக்கு (1200 நபர்கள்) தலா 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 3 கோடியே 60 லட்சம் ரூபாய் ஒருமுறை மூலதன மானியமாக வழங்கப்படும்.

✦புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பி வந்த 5,010 இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் தலா 1 லட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 50 கோடியே 10 லட்சம் ரூபாய் நீண்டகால கடனாக வழங்கப்படும்.

✦ஒரு உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு 500 நபர்கள் வீதம் 37,500 பயனாளிகள் பயன் பெறும் வகையில் 75 உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு தலா 10 லட்சம் ரூபாய் என 7 கோடியே 50 லட்சம் ரூபாய் மூலதன மானியமாக வழங்கப்படும்.

✦மாற்றுத் திறனாளிகள், விதவைகள், திருநங்கைகள், ஆதரவற்றோர் உள்ளிட்ட நலிவுற்றோரின் தொழில் மேம்பாட்டிற்காக 31,952 நபர்களை தேர்ந்தெடுத்து தொழில் மூலதன நிதியாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் மொத்தம் 49 கோடியே 92 லட்சம் ரூபாய் நீண்டகாலக் கடனாக வழங்கப்படும்.

மேலும், இத்திட்டத்தின் கீழ், கொரோனா வைரஸ் தடுப்பு முகக்கவசம் தயாரித்தல், கிருமிநாசினிகள் மற்றும் கைகழுவும் திரவ சோப்பு தயாரித்தல், ஆடைகள் தயாரிப்பு, பால்வள மேம்பாடு, ஆடு, மாடு, கோழி, பன்றி மற்றும் மீன் வளர்ப்பு, சிறு உணவகங்களை நடத்துதல், வேளாண் பொருட்கள் விற்பனை, சிறு மளிகைக் கடைகள் வைத்தல், அரவை மாவுத் தொழில், பல்வேறு உலோகப் பொருட்களைத் தயாரித்தல், செயற்கை ஆபரணத் தொழில், அழகுக்கலை, மரச்சிற்பங்கள் / மரவேலைகள், மின் பழுது நீக்கம், குழாய் பழுது நீக்கம், வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது நீக்கம், கணினி சார்ந்த தொழில்கள், கைப்பேசி பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களின் மேம்பாட்டிற்காக இச்சிறப்பு நிதியுதவி வழங்கப்படும். இதன் மூலம் ஊரகப் பொருளாதார வளர்ச்சியும், ஊரகத் தொழில்களில் எழுச்சியும், மக்களின் வருமானத்தில் முன்னேற்றமும் ஏற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்புத் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாகத் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்புத் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் நுட்பவியல்துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்களால் 31.05.2020 அன்று வழங்கப்பட்டது. இதனைப் போன்று மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பயனாளிகளுக்கு கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்புத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்புத் திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாகத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட கிராமப்புற தொழில்களை மேம்படுத்துவதற்காக 300 கோடி ரூபாய் மதிப்பில் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்புத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் 28.5.2020அன்று துவக்கி வைக்கப்பட்டு, அதன் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு சிறப்பு நிதியுதவி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையின் கீழ் 01.06.2020 அன்று காணொலி காட்சி மூலம் அனைத்து மாவட்ட ஊரகப் புத்தாகத் திட்டத்தின் செயல் அலுவலர்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள் மற்றும் அலுவலர்களுடனும், 03.06.2020 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்புத் திட்டத்தினை விவரித்து, துரித நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், திட்டப் பயனாளிகளை அடையாளம் காணுதல், நிதியுதவி பெற தகுதி மற்றும் வழிமுறைகள், திட்டப் பணியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் பற்றி விளக்கினார்.

கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்புத் திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்துவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம்

கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்புத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனை நடத்தியதன் தொடர்ச்சியாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்புத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவது குறித்த கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் அனைத்து மாவட்ட செயல் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரக தொழில்களை மேம்படுத்தவும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரால் மேற்கொள்ளப் படும் வாழ்வாதாரத் தொழில்கள், சுய உதவிக் குழு மகளிர் தொழில் முனைவோர்கள். உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் மற்றும் புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்களுக்குப் புதிதாகத் தொழில் துவங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்துடன் இணைந்து செயல்படவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் இக்கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், வழங்கப்பட்ட நெறிமுறைகளின்படி தகுதியான பயனாளிகளைக் கண்டறியவும் அறிவுரை வழங்கப்பட்டு, இதனைத் தொடர்ந்து பயனாளிகளைக் கண்டறியும் பணி திட்டப் பணியாளர்கள் மற்றும் பிறதுறை அலுவலர்களுடன் இணைந்து நடை பெற்று, நிதி விடுவிக்கும் பணி அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம்

சேலம் மாவட்டம்

திருப்பூர் மாவட்டம்

திருவாரூர் மாவட்டம்

திருச்சி மற்றும் கரூர் மாவட்டம்

கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்புத் திட்டம்

மாண்புமிகு முதல்வரின் மகத்தான திட்டம்!
கொரோனா சிறப்பு நிதியுதவி
தொகுப்புத் திட்டம்!
ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில்-இது
உயிர் மூச்சாய் விளங்கும் திட்டம்!

கிராமப்புற தொழில்களைக் காத்திட வந்ததே
கொரோனா நிதியுதவி தொகுப்புத் திட்டம்!

புத்தாக்கத் திட்டப் பணியாளர்களே...
புத்துணர்ச்சியுடன் புறப்படுவோம்!
கிராமப்புற தொழில்களுக்கு
புதுப்பொலிவு தந்து புதுமை படைப்போம்!

செயல் அலுவலர்களே...
செயல் வீரர்களாக களம் இறங்க வேண்டும்!
வட்டார அணித் தலைவர்களே...
உங்களுக்கான வாழ்நாள் லட்சியமாக எண்ணி
வரமாக மாற்றி வரலாறு படைத்திட
வாய்ப்பை வலிமையுடன் பயன்படுத்துங்கள்!

திட்ட செயலாக்கர்களே...
தீயாய் புறப்படுவோம்!
திறம்பட பணியாற்றுவோம்!
விடுமுறைக்கே விடுமுறை அளித்து
இனியொரு விதி செய்வோம்!

புலம் பெயர்ந்த இளைஞர்களுக்கு
பலமாக நாம் இருப்போம்!
தூண்டல் நிதி வழங்கி- வேண்டிய
தொழில் வளம் பெருக்கிடுவோம்!

மாற்றுத் திறனாளிகளும்
ஏற்றம் பெறச் செய்திடுவோம்!
நலிவுற்றோருக்கும்
நல்வாழ்வு கிடைக்கச் செய்வோம்!
கொரோனாவின் கோரப்பிடி நீங்கி
மீண்டும் கோலோச்சிட
மக்கள்அமைப்புகளோடு
தோளோடு தோள் கொடுத்து
மகத்தான முன்னேற்றம் கண்டிடுவோம்...!

● ச. ரமேஷ்
செயல்அலுவலர் (வணிகத் திட்டம் (ம) நிதி)
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
சிவகங்கை மாவட்டம்

புதிய தெய்வங்கள்

1. நோய் கொண்ட உலகில் உயிர்களைக் காக்கும்
மருத்துவர்களே புதிய தெய்வங்கள்;
தாயுள்ளத்துடனே வெண்ணிற உடையில்
உழைக்கின்ற செவிலியர் தேவதைகள்;
உயிரைக் காத்து நம்பிக்கை வளர்க்கும்
மருத்துவமனைகள் புது ஆலயங்கள்-இவை
உலகம் முழுதும் உடல்நலம் மனநலம்
காக்கும் 'ஓசோன்' மண்டலங்கள்... !

2. கொரோனா என்னும் கொடிய கிருமி
மனித வாழ்வை முடக்கியது;
உலகின் ராஜா நான்தான் என்ற
நாட்டினையெல்லாம் அடக்கியது;
பலவீனமான மனிதரையெல்லாம்
தேடித் தேடி தாக்கியது;
அதன் தாக்கம், வேகம், அச்சம் எல்லாம்
மருத்துவத்துறைதான் போக்கியது... !

3. எந்த நோய் என்றாலும்
தீர்த்து வைப்பார் மருத்துவர்;
புதிய நோய் வந்தாலும்
மருந்து காண்பார் மருத்துவர்-வாழ்வில்
நொந்துபோய் உடல் நலிந்து
நோயுற்ற மனிதர்க்கெல்லாம்
வைத்தியத்தால் சுகம் தந்து
ஒளி தருவார் மருத்துவர்...!

4. ஆலகாலம் தீண்டும் போது
அமுதம் தருபவர் மருத்துவர்;
நோய்கள்பரவும் காலத்தில்
தாய் போல் காப்பவர் மருத்துவர்;
மனிதர்கள், விலங்குகள் அனைவர்க்கும்
காக்கும் கடவுள் மருத்துவர்;
பனிமலை மீதினில் கனி தரும் சோலை போல்
கவனம் ஈர்ப்பவர் மருத்துவர்...!

5. அரசுகள் தொடங்கி அடியவர் வரையில்
அனைவரும் தீவிரம் காட்டுகின்றார்;
மருத்துவர் தொடங்கி மருந்தடிப்பவர் வரையில்
கொரோனா தடுப்பைச் செய்கின்றார்;
அமைச்சர்கள், ஆட்சியர், அலுவலர், ஊழியர்
தொடர்ந்து உழைத்து வருகின்றார்;
மக்களைக் காக்கும் மாபெரும் பணியினைச்
சோர்விலாது செய்கின்றார்...!

6. மனித உயிர்களைக் காக்கும் பணியினைச்
செய்பவர் அனைவர்க்கும் வாழ்த்துகள்!
மனம் உவந்து அவர்தம் முயற்சிக்கு
தோள் கொடுப்போம் வாருங்கள்!
கொரோனா நீங்கி மக்கள் வாழ்வில்
நலம் பெற என்றும் துணை நிற்போம்!
கோவிட் என்னும் கோலியாத்தை வீழ்த்தும்
டேவிட்டை (மருந்து) விரைவில் கண்டறிவோம்!

● ஜா. சம்பத்
முதன்மை செயலாக்க அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)- தேசிய வள மையம் (NRO) கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு பணியில் பெண் சுகாதார தன்னார்வலர்களின் (WHV) சிறப்பான பணிகள்

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டாரத்தில் மக்கள் தொகை அடிப்படையிலான தொற்றா நோய் கண்டறியும் திட்டத்தில் பெண் சுகாதார தன்னார்வலர்கள் (WHV) சிறப்பாக பணிபுரிந்து வருகின்றனர். மலைப்பகுதியில் வசிக்கும் ஏழை மக்களின் அனைத்து வயது பிரிவினருக்கும் அர்ப்பணிப்புடன் பணி செய்து வருகின்றனர்.

கோவிட்-19 தடுப்புப் பணிக்காக தோற்றா நோயான உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவு சரிபார்த்து மாத்திரை வழங்குதல், கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்று கை கழுவும் முறைகள் மற்றும் தன் சுத்தம் பற்றி பயிற்சி அளித்தல், வெளி மாநிலத்தில் இருந்து வந்த தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ள நபர்களை WHV நேரில் சென்று பரிசோதனை செய்தல், தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு கோவிட்-19 வராமல் தடுக்க கபசுர குடிநீர், நில வேம்பு கசாயம், VITAMIN-C மற்றும் ZINC மாத்திரை வழங்குதல், மக்கள் வெளியில் செல்லும் போது முகக்கவசம் அணிந்து செல்ல அறிவுறுத்தல், சமூக இடைவெளி பின்பற்ற விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் கருவுற்ற கர்ப்பிணி தாய்மார்களுக்கு தனி கவனம் செலுத்தி இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு பரிசோதனை செய்து தேவையான ஆலோசனைகள் வழங்குதல் போன்ற பணிகளை பெண் சுகாதார தன்னார்வலர்கள் (WHV) சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

முகக் கவசமே உயிர்க் கவசம்...!

தலைக்கவசமே உயிர்க் கவசம்
என்றிருந்ததை மாற்றி இன்று
முகக் கவசமே உயிர்க் கவசம்
என மாற்றிய கொரோனாவை
தனித்திருந்து... விலகியிருந்து...
விரட்டியடிப்போம்...!
பாதுகாப்புடன் இருப்போம்...
உயிர்களைக் காப்போம்...!!

● செல்வி. ர. ஹேமலதா,
இ.ஆர். நகர், செங்கல்பட்டு மாவட்டம்.

சமூக சுகாதார தன்னார்வலர்களின் (NCD) கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு விழிப்புணர்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள பெண்களை மக்கள் தொகை அடிப்படையிலான தொற்றா நோய் கண்டறியும் திட்டத்தில் சமூக சுகாதார தன்னார்வலர்களாக (NCD) இணைத்து, அவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றை சோதனை செய்யும் முறை குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து சமூக சுகாதார தன்னார்வலர்களாக தேர்வு செய்யப்பட்டவர்கள் கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி (BP & Sugar) ஆகிய நோய்கள் குறித்து பரிசோதனை மேற்கொண்டு, சிகிச்சை தேவைப்படுபவர்களை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை வழங்கி, மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்க வழி செய்து வருகின்றனர்.

கொரானா வைரஸ் தொற்று பரவல் இருப்பதால் மருத்துவமனைக்கு செல்ல இயலாத ஏழை மக்களுக்கு மருத்துவமனையில் தரும் மருந்து மாத்திரைகளை வாங்கி அவர்களின் வீடுகளுக்கே கொண்டு சென்று தருதல், தனிநபர் இடைவெளியை கடைப்பிடித்திட அறிவுறுத்துதல், கிருமிநாசினி மற்றும் முகக் கவசங்களை வழங்குதல், நோய் தொற்று குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை சமூக சுகாதார தன்னார்வலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டம்

கோவிட்-19 பரவல் தடுப்புப் பணியில் திருநெல்வேலி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கோவிட்-19 தடுப்புப் பணியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மானூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர் குழுக்களின் பங்களிப்பு சிறப்பாக உள்ளது. இக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இவ்வாண்டு மார்ச் மாத இறுதி முதல் பல்வேறு நோய் தடுப்பு உபகரணங்கள் தயாரித்தல் மற்றும் இடம் பெயர் தொழிலாளர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் அனைவரும் வியக்கத்தக்க வகையில் பல்வேறு உதவிகளை செய்து வருகின்றனர்.

மானூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது தங்களின் சொந்த நிதி, மாவட்ட மகமை மூலம் கடனாக பெற்ற ரூ. 5 இலட்சம் நிதி மற்றும் தங்களது உறுப்பினர் குழுக்களின் துணையோடு திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் உள்ள பல்வேறு அரசு அலுவலகங்கள், அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் இதுவரை 2,17,612 கொரோனா தடுப்பு முகக் கவசங்கள், 10,315 லிட்டர் அளவிலான கை கழுவும் திரவம் மற்றும் 1110 லிட்டர் அளவிலான சானிட்டைசர் திரவம் ஆகியவற்றை தயாரித்து வழங்கியுள்ளனர்.

மேலும் திருநெல்வேலி மற்றும் சுற்று வட்டார மாவட்டங்களில் இருந்து வெளி மாநிலங்களுக்கு சிறப்பு புகை வண்டிகள் மற்றும் பேருந்துகள் மூலம் சென்ற வெளி மாநில தொழிலாளர்களுக்கு 48,967 எண்ணிக்கையிலான உணவு பொட்டலங்கள் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து சொந்த மாவட்டமான திருநெல்வேலிக்கு வருகை புரிந்து ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக வளாகங்களில் 5 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்ட 595 நபர்களுக்குத் தேவையான உணவு, சிற்றுண்டி, குடிநீர் மற்றும் கபசுர குடிநீர் தயாரித்து வழங்குதல் போன்ற பணிகளை எவ்வித தொய்வும் இல்லாமல் மானூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது தங்களின் உறுப்பினர் குழுக்களின் துணையோடு செய்து முடித்து, பொதுமக்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் நன்மதிப்பை பெற்றுள்ளது.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (74,300 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

22-ம் ஆண்டில்
வெற்றிநடை போடும்

முற்றம்

- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

**"எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும்,
எங்கள் கையில் என சங்கே முழங்கு!"**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் மூலம்,
நகர்ப்புற ஏழை, எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களைத் தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக் குரியது.